SENGUNTHAR

Daily News

24-11-2026/SEC/DN/522



The second day of the Student Well-Being Programme, *"Mind, Body, Campus: Yoga & Well-Being"*, was conducted with enthusiastic participation from first-year students at Sengunthar Engineering College. The session featured an informative talk on the importance of yoga and its benefits for maintaining physical fitness, mental wellness and emotional stability. Students actively participated in various yoga practices, breathing exercises and relaxation techniques under the guidance of the instructor. The session emphasised the importance of incorporating yoga into daily life to improve concentration, reduce stress and promote a healthy lifestyle. The programme aimed to nurture a positive mindset and foster holistic well-being among students.



SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU

SENGUNTHAR
Daily News
24-11-2026/SEC/DN/522

நுவலி தமிழ் மன்றம் சார்பில் ‘பைந்தமிழ்’ கவியரங்கம் சிறப்பாக நடைபெற்றது!



நுவலி தமிழ் மன்றத்தின் சார்பில், 24.11.2026 அன்று பௌர்ணமியை முன்னிட்டு, ‘பைந்தமிழ்’ என்ற தலைப்பில் கவியரங்கம் சிறப்பாக நடைபெற்றது.இந்நிகழ்வில் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த ஏராளமான மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இக்கவியரங்கத்தில் மாணவர்கள் தாங்களாகவே இயற்றிய கவிதைகளை அரங்கேற்றி, தமிழ்மொழியின் மீதான தங்களது ஆர்வத்தையும், படைப்பாற்றலையும், கவிதை இயற்றும் திறனையும் சிறப்பாக வெளிப்படுத்தினர்.

தமிழ்மொழியின் தொன்மை, இனிமை, இலக்கியச் செழுமை மற்றும் பண்பாட்டுப் பெருமைகளைப் போற்றும் வகையில் மாணவர்களின் கவிதைகள் அமைந்திருந்தன. மாணவர்களின் தனித்துவமான சிந்தனைகளும், அழகிய தமிழ்ச் சொற்களால் வடிவமைக்கப்பட்ட கவிதைகளும் நிகழ்விற்கு மேலும் சிறப்பு சேர்த்தன.இத்தகைய கவியரங்க நிகழ்வுகள் மாணவர்களிடையே தமிழ்மொழிப் பற்றை வளர்ப்பதோடு, அவர்களின் படைப்பாற்றல், மேடைப் பேச்சுத்திறன் மற்றும் இலக்கிய ஆர்வத்தை மேம்படுத்துவதற்கும் உறுதுணையாக அமைகின்றன.மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்வு, தமிழ்மொழியின் பெருமையை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் சிறந்த முன்னெடுப்பாக அமைந்தது.





Department of EEE

Organized a guest lecture for First year EEE student Role of Electrical Engineers in Sustainable Energy Development. The main objectives of the program is to create awareness among students about the role of electrical engineers in sustainable energy development by exploring renewable energy technologies, energy-efficient systems, smart grid applications, and innovative solutions for addressing future energy challenges while promoting environmental sustainability.

நுவலிதமிழ்மன்றம் - தினம்ஒருதிருக்குறள்



குறள் 881:
நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

விளக்கம்:
நிழலும் நீரும் நுகரும் காலத்தில் இன்பமானாலும், பின்னர் நோய் செய்யும்; தழுவவேண்டும் சுற்றத்தாரின் இயல்புகளும் முதலில் இனியவாயினும், பின்னர் இன்னாதனவாகும்

இலக்கணக்குறிப்பறிதல்

உவமைத் தொகை

உவமைக்கும் உவமேயத்திற்கும் (பொருளுக்கும்) இடையில் போல, போன்ற, நிகர, அன்ன என்னும் உவம உருபுகளுள் ஏதேனும் ஒன்று மறைந்து உருவது உவமைத் தொகையாகும்..

எ.கா

மலர் போன்ற கரம் எனப் பொருள் தருகிறது.
மலர் -உவமை.
கரம் – உவமேயம் (பொருள்)
இடையில் 'போன்ற' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளதால் இது உவமைத் தொகையாகும்.

பிறமொழிக்கு இணையான தமிழ்ச்சொற்கள்

பிறமொழி: சகோதரர் தமிழ்மொழி: உடன்பிறப்பு